IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.

O.S. No.131/2023

Deposition of Witness for PW1

Name : திரு. கிருஷ்ணமணி.
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.03.2025.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். 10.01.2022ம் தேதியிட்ட பிரதிவாதி ராஜீ எனக்கு எழுதிக் கொடுத்த கடனுறுதிப் பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.1. 16.10.2023 தேதியிட்ட நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்வின் நகல் வா.சா.ஆ.2. அதற்கான அஞ்சலக ரசீது வா.சா.ஆ.3. அந்த அறிவிப்பினை 18.10.2023 அன்று பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.4. 03.09.2020 தேதியிட்ட பிரதிவாதியின் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. அந்த சொத்திற்கான வில்லங்கச்சான்றிதழ் – 01.01.2019 முதல் 15.11.2023 வரையிலானது வா.சா.ஆ.6. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.